## பாடம் 13

## நிகழ்த்துதல்(மேம்பட்டது)

## பகுதி அ

1. நிகழ்த்துதலில் புதிய சில்லுவை உருவாக்கும்போது அது கொடாநிலையாக என்ன வரைநிலையுடன் தோன்றும்?

அ) காலி நிகழ்த்துதல்(Blank Slide Layout)வரை நிலையுடன்

2. பின்வருவனவற்றுள் எது நிகழ்த்துதலில் முன்கூட்டியே வடிவமைக்கப்பட்ட வரைநிலை இல்லை?

அ) முக்கிய உள்ளடக்க அமைப்பு(Manin Content Layout)

3. உதவி(HELP) பட்டியலில் உள்ள EXTENTED HELP என்ற விருப்பத்தின் பயன் யாது?

அ) விரிவான கருவி உதவிக்குறிப்பு தகவல்

4. உரைவடிவமைப்பு செய்ய பயன்படும் குறுக்குவழி சாவி எது?

இ)F11

5. நிகழ்த்துதலில் கூடுதலாக சில்லுவை சேர்க்கும்போது சில்லுவில் தோன்றும் கொடாநிலை வரைநிலை எது?

அ) கால நிகழ்த்துதல் சில்லு வரைநிலை

6. படத்தில் உள்ள குறும்படத்தின் பெயர் யாது?

அ) புதிய நிகழ்த்துதலை உருவாக்கல்

7. கூடுதலாக உருவாக்கப்படும் சில்லுகளில் எந்த கூற்றானது இடம் பெறாது?

ஈ) Insert Grid

8. நிகழ்த்துதலை துவக்க பயன்படும் Slide Show தேர்வானது எந்த பட்டையில் இடம்பெறும்?

அ)Toolbar

## பகுதி ஆ

Kindly Send Me Your Key Answers to Our email id - padasalai.net@gmail.com

1. <u>தானியங்கு தகவலை மீட்டு சேமித்தல் முறை(Save Autorecovery information) பற்றி நீ அறிவது யாது?</u>

   தானியங்கு தகவல் மீட்டு சேமித்தல்(Tools=>Options,plus sign next to Load button, Check Save Autorecovery information),enter number of minutes)ON செய்து பக்கத்தில் உள்ள பெட்டியில் எவ்வளவு நிமிடங்கள் என்று கொடுத்தால்,ஒவ்வொரு குறிப்பிட்ட நேரத்திற்கு பிறகும் இது ஆவணத்தை சேமிக்கிறது.

2. <u>விரிவாக்கப்பட்ட குறிப்புகள்(Extented TIPS) -வரையறு</u>

   கருவிப்பலகத்தில் உள்ள கருவிகள் மீது சுட்டெலியை கிளிக் செய்யாமல் குறிப்பிட்ட நேரம் நிறுத்தினால் இது இம்ரெஸ்ல் உள்ள கருவிகளைப் பற்றி விரிவான கருவி உதவிக்குறிப்பு தகவல்களை தருகிறது.

3. <u>முன்கூட்டியே வடிவமைக்கப்பட்டுள்ள வரைநிலைகளைப் பட்டியலிடு</u>

   ஏற்கனவே வடிவமைக்கப்பட்ட வடிவமைப்புகள்(pre packaged layouts) இம்ரெஸ்ல் பல உள்ளன. அவற்றில் தேவையானவற்றை நாம் தேர்வு செய்து தகவல்களை சேர்க்கலாம்.

4. <u>Slide Master-வரையறு</u>

   பணிப்பலகத்தில் உள்ள Mater pageதொகுதிக்கு சென்றால் அங்கே பல முன் வடிவமைக்கப்பட்ட பல சில்லுகள் உள்ளன. அவற்றில் காலி சில்லு கொடாநிலையாக அமைந்திருக்கும். இவற்றில் ஒன்றை தேர்வு செய்து Slide Master ஆக மாற்றலாம். இதில் உள்ள தகவல்கள் அனைத்து சில்லுகளிலும் வரும்.

5. <u>நிகழ்த்துதலை ஆதரிக்கும் கோப்புகளின் வகைகளை பட்டியலிடு</u>

   .ppt, .pptx,.pptm,.pdf, .odp

## <u>பகுதி இ</u>

1. <u>நிகழ்த்துதலில் முதல் சில்லுவை உருவாக்கும் வழிமுறைகள் யாவை?</u>

   அ. File->New->Presentation என தேர்வு செய்ய வேண்டும்
   ஆ. காலி சில்லு என்ற வகையை தேர்வு செய்ய வேண்டும்
   இ. பின்னர் தோன்றும் வழிகாட்டு ஜன்னல் திரையில் முதன்மை விருப்பங்களை கொடுக்க வேண்டும்
   ஈ.பின்னர் சில்லுக்கான விளைவுகளை தேர்வு செய்ய வேண்டும்

2. <u>நிகழ்த்துதலில் ஒரு சில்லுவை நீக்கும் வழிமுறை யாது?</u>

   1.நீக்க வேண்டிய சில்லுவை தேர்வு செய்ய வேண்டும்
   2. Edit->Delete Slide அல்லது விசைப்பலகையில் உள்ள Delete விசையை அழுத்த வேண்டும் அல்லது வலது கிளிக்செய்து Delete Slide என கொடுக்க வேண்டும்

3. <u>நிகழ்த்துதல் கோப்பினை எவ்வாறு சேமிப்பாய்?</u>

1. File → Save (or) Ctrl + S (or) கிளிக் "Save" icon
2. முதன்முறையாக சேமிக்கும்போது Save As உரையாடல் பெட்டி தோன்றும் அதில்
3. File Name என்ற இடத்தில் கோப்பின் பெயரை தட்டச்சு செய்து சேமிக்கலாம்.

4. Master Slide-என்பதை வரையறு

Master Slide என்பது Master pageதொகுதியில் வடிவமைக்கப்பட கூடிய சில்லுவாகும். இதில் எல்லா சில்லுகளிலும் வரவேண்டிய செய்திகளை கொடுக்க வேண்டும். எடுத்துக்காட்டாக நிறுவனத்தின் Logo , பெயர் உரை ஆசிரியர் பெயர், தலைப்பு போன்ற தகவல்களை கொடுக்கலாம்.

பகுதி ஈ

1. நிகழ்த்துதலில் உள்ள வரைகலை பொருள்கள் பற்றி(Graphics Objects) விரிவாக விவரிக்கவும்.
   - நிகழ்த்துதலில் நாம் வரைந்த படங்களையோ அல்லது கேமரா மூலம் எடுக்கப்பட்ட படங்களை நாம் சேர்க்கலாம்.
   - படங்களை சேர்க்க Insert->Picture->From file என்ற தேர்வின் மூலம் தோன்றும் Insert Picture உரையாடல் பெட்டியில் தேவையான படத்தை குறிப்பிட்ட கோப்புறையில் இருந்து தேர்ந்தெடுத்து Open என்ற பொத்தானை கிளின் செய்ய வேண்டும்
   - மேலும் அட்டவணையையும் சேர்க்கலாம்.
   - அட்டவணையைச் சேர்க்க Insert->Table என்ற தேர்வின் மூலம் தோன்றும் உரையாடல் பெட்டியில் வரிசை நெடுவரிசை எண்ணிக்கையை கொடுத்து OK பொத்தானை கிளிக் செய்யவும்
   - முன் கூட்டியே வடிவமைக்கப்பட்டுள்ள அட்டவணை வடிவமைப்பு வகையில் ஏதேனும் ஒன்றை தேர்வு செய்து அட்டவணையின் வண்ண அமைவுகளை மாற்றலாம்.

2. பல்லூடக கோப்புகளை நிகழ்த்துதலில் பயன்படுத்தும் வழிமுறைகளை விளக்குக.

   பல்லூடக கோப்புகள், உரைகோப்புகள், ஒலி,ஒளிக்காட்சி கோப்புகள், அசைவூட்ட கோப்புகள், படக்கோப்புகள் போன்றவை.

   - படங்களை சேர்க்க Insert->Picture->From file என்ற தேர்வின் மூலம் தோன்றும் Insert Picture உரையாடல் பெட்டியில் தேவையான படத்தை குறிப்பிட்ட கோப்புறையில் இருந்து தேர்ந்தெடுத்து Open என்ற பொத்தானை கிளின் செய்ய வேண்டும்
   - ஒலி,ஒளிக்காட்சி கோப்புகளை சேர்க்க Insert->Movie and Sound என்ற தேர்வின் மூலம் தோன்றும் Insert Movie and Sound உரையாடல்

பெட்டியில் தேவையான கோப்பை தேர்ந்தெடுத்து Open என்ற பொத்தானை கிளின் செய்ய வேண்டும்

3. <u>நிகழ்த்துதலில் Master Page-ஐ பயன்படுத்துவதால் ஏற்படும் நன்மைகளைப் பட்டியலிட்டு விவரி?</u>

- Master pageல் எல்லா சில்லுகளிலும் வரவேண்டிய செய்திகளை கொடுக்க வேண்டும். எடுத்துக்காட்டாக நிறுவனத்தின் Logo , பெயர் உரை ஆசிரியர் பெயர், தலைப்பு போன்ற தகவல்களை கொடுக்கலாம்.
- இதற்கு பணிபலகத்தில் உள்ள Master pageதொகுதி கிளிக் செய்து Master Slide உருவாக்க வேண்டும். (பல வடிவமைப்புகள் ஏற்கனவே அங்கே இருக்கும்)
- தேவையான வடிவமைப்பை தேர்ந்தெடுத்த உடன் நாம் எல்லா சில்லுகளிலும் வரவேண்டிய தகவல்களை கொடுக்க வேண்டும்.
- இதனால் ஒவ்வொரு சில்லுவிலும் வரவேண்டிய தகவல்களை ஒரே இடத்தில் கொடுத்தால் போதுமானது.
- நமது நேரம் சேமிக்கப்படுகிறது. வேலை பலு குறைகிறது, தகவல்களை சேர்த்தல் நீக்குதல் மற்றும் திருத்துதல் எளிமையாகிறது.

4. <u>பள்ளி ஆண்டு சாதனை பற்றிய நிகழ்த்துதலை உருவாக்கி கீழ்காணும் செயல்பாட்டை செய்க.</u>

<u>அ) தலைப்பு வரைநிலையுடன் கூடிய (TITLE SLIDE LAYOUT) முதல் சில்லுவாக சேர்த்தல்</u>

முதல் சில்லுவை தேர்ந்தெடுக்க வேண்டும். சில்லுவை தேர்ந்தெடுக்க சில்லுபலகத்தில் அதன் மீது கிளிக் செய்ய வேண்டும். பின்னர் Layout தொகுதிக்கு சென்று தலைப்பு வரைநிலையுடன் கூடிய சில்லுவை தேர்ந்தெடுக்க வேண்டும்

<u>ஆ) கூடுதல் சில்லுகளை உருவாக்கி அதில் பள்ளியின் சாதனை பற்றிய புகைப்படங்கள், ஒளிக்காட்சிகள் ஆகியவற்றை சேர்த்தல்</u>

- கூடுதல் சில்லுகளை உருவாக்க Insert->Slide என கொடுத்து தேவையான சில்லுகளை சேர்க்கலாம்,
- அதில் புகைப்படங்கள் மற்றும் ஒளிக்காட்சிகளை சேர்க்க Insert->picture->from file மற்றும் Insert->Movie and Sound என தேர்வு செய்து சேர்க்கலாம்

<u>இ) சில்லுகளை நீக்குதல் மற்றும் மறுசீரமைத்தல் செயல்பாடுகளை செய்யவும்</u>

- தேவையற்ற சில்லுகளை தேர்ந்தெடுத்து Edit->Delete Slide அல்லது Delete விசையை அழுத்த வேண்டும்
- மறுசீரமைக்க பணிப்பகுதியில் உள்ள Slide Sorter Viewஐ தேர்ந்தெடுக்க வேண்டும். அதில் அனைத்து சில்லுகளும் குறும்படங்களாக

காட்சியளிக்கும், அதில் ஒவ்வொரு சில்லுவையும் கிளிக்செய்து தேவையான இடத்தில் இழுத்து விடலாம்.

ஈ) <u>இறுதியாக சில்லுக்காட்சியை இயக்கி நிகழ்த்துதலை துவக்கலாம்</u>

நிகழ்த்துதலை துவங்க

- Slide Show->Slide Show என்ற தேர்வின் மூலம் துவங்கலாம்
- கருவிப்பட்டையில் உள்ள Slide Show குறும்படத்தை கிளிக் செய்து துவங்கலாம்
- F5 அல்லது F9 பொத்தானை அழுத்தியும் துவங்கலாம்

www.Padasalai.Net